# பாரதிதாசன் பல்கலைக்கழகம்

(தேசிய மதிப்பீட்டு தரநிர்ணயக்குழுவின் மதிப்பீட்டில் 'A+'தரச்சான்றிதழ் மூன்றாம் சுற்றில் பெற்றது)

**பல்கலைப் பேரூர், திருச்சிராப்பள்ளி–620024**

**முனைவர் சு.சீனிவாசராகவன்,**எம்.ஏ., எம்.எல்.ஐ.எஸ்ஸி., பிஎச்.டி.,
**தேர்வு நெறியாளர் (பொ)**

**தொலைபேசி : 0431- 2407016/ 2407060**
**தொலை நகலி : 0431 - 2407444**
**மின்னஞ்சல் : coe@bdu.ac.in**
**வலைதளம் : www.bdu.ac.in**

---

<u>ந.க. எண்: தே.பி./இளநிலை/செய்முறைத்தேர்வுகள் /ஏப்ரல் 2023/ நாள்: 16.03.2023</u>

பெறுபவர்

முதல்வர்
பல்கலைக்கழக இணைவு பெற்ற அனைத்துக் கல்லூரிகள் (தன்னாட்சி பெறாத கல்லூரிகள்)

அய்யா/அம்மையீர்,

**பொருள்**: இளநிலைத் தேர்வுப் பிரிவு –ஏப்ரல் 2023–ல் நடைபெறவிருக்கும் பல்கலைக்கழக இளநிலை பட்டப்படிப்பு பாடங்களுக்கான செய்முறை தேர்வுகள் - வழிகாட்டுதல்கள் - தெரிவித்தல் - தொடர்பாக.

**பார்வை**:1. துணைவேந்தர் அவர்களின் ஆணை நாள்: 10.02.2023
2. இவ்வலுவலக ந.க. எண்: தே.பி./இளநிலை/செய்முறைத்தேர்வுகள் /ஏப்ரல் 2023 நாள்:21.02.2023
3. துணைவேந்தர் அவர்களின் ஆணை நாள்:16.03.2023

---------

பார்வை 2-இல் காணும் இவ்வலுவலக கடிதத்தின் மூலம் பல்கலைக்கழகத்தில் நடைபெறவிருக்கும் ஏப்ரல் 2023-ஆம் ஆண்டு இளநிலை பட்டப்படிப்புகளுக்கான செய்முறைத் தேர்வுகளை 20.03.2023 முதல் 22.03.2023 வரையில் B.A., B.B.A., B.Lit., Pulavar Pattam, B.Com. ஆகிய பட்டப் பாடங்களுக்கும், 20.03.2023 முதல் 08.04.2023 வரையில் B.Sc. பட்டப் பாடங்களுக்கும் நடத்துவதற்கான தேர்வுக் கால அட்டவணைகளை தயார் செய்து 10.03.2023ஆம் நாளுக்குள் தேர்வு நெறியாளருக்கு அனுப்பி வைக்க முதல்வர்களைக் கேட்டுக்கொள்ளப்பட்டது.

அதன்படி பெறப்பட்டுள்ள தேர்வுக்கால அட்டவணைகளுக்குத் தேர்வு நெறியாளரின் ஒப்புதலுடன் மீண்டும் கல்லூரிகளுக்கு அனுப்பப்பட்டு வருகிறது.

இந்நிலையில், பார்வை 3இல் காணும் துணைவேந்தர் அவர்களின் ஆணையினபடி கீழ்காணும் தகவல்கள் தெரிவிக்கப்படுகிறது.

1. ஒரு நேரத்திற்கு (Session) பத்து மற்றும் 10-க்குக் குறைவாக மாணாக்கர்களைக் கொண்டுள்ள பாடப்பிரிவுகளுக்குத் தேர்வுக் கால அட்டவணையின்படி அந்தந்த கல்லூரிகளே செய்முறைத் தேர்வுகளை நடத்திக் கொள்ள வேண்டும்.

2. ஒரு நேரத்திற்கு (Session) பத்துக்கு (10-க்கு) மேல் உள்ள மாணாக்கர்களைக் கொண்ட பாடங்களுக்கு பல்கலைக்கழகம் புறத்தேர்வாளர்களை நியமனம் செய்து கல்லூரிகளுக்குத் தெரிவிக்கப்படும். தேர்வு நாளில் புறத்தேர்வாளர் வராதபட்சத்தில் அருகிலுள்ள கல்லூரித் துறை ஆசிரியரைப் புறத்தேர்வாளராக கல்லூரியே நியமணம் செய்து செய்முறைத் தேர்வுகளை நடத்திட வேண்டும். **அன்றைய தினமே, கல்லூரி நியமணம் செய்த புறத்தேர்வாளர் குறித்த விவரத்தைப் பல்கலைக்கழகத்திற்கு தெரிவிக்க வேண்டும்.**

3. மேலும், கல்லூரிகளில் அந்தந்தப் பாடப்பிரிவுகளுக்குப் பல்கலைக்கழகம் அனுமதிக்கப்பட்டுள்ள இடங்களில் சேர்க்கை பெற்றுள்ள மாணாக்கர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில், செய்முறைத் தேர்வை நடத்திட வேண்டும்.

4. அவ்வாறு நடத்தும்பொழுது ஏற்கனவே, 10 மற்றும் 10-க்குக் கீழ் உள்ளவாறு பிரித்து செய்முறைத் தேர்வுக்கான கால அட்டவனையை அனுப்பி இருந்தால், ஒரு நேரத்திற்கு (Session) மாணாக்கர்களின் எண்ணிக்கையை பத்தி 2இல் தெரிவித்துள்ளவாறு 10-க்கு மேல் உள்ளவாறு காலையிலோ அல்லது மாலையிலோ நடத்திடும் வகையில் மாற்றி அமைத்து அருகிலுள்ள கல்லூரியிலிருந்து புறத்தேர்வாளர்களை நியமனம் செய்து செய்முறைத் தேர்வுகளை நடத்திட முதல்வர்களைக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

5. மேலும், பல்கலைக்கழக ODD Semester / EVEN Semester செய்முறைத்தேர்வில் தேர்ச்சி பெறாத மாணவ / மாணவிகள், அந்தந்த ODD / EVEN பருவத்தேர்வில்தான் செய்முறைத் தேர்வுகளை (Practical Examinations) செய்திட இயலும் என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. இதனைத் தங்கள் கல்லூரியில் பயிலும் மாணவ/ மாணவிகளுக்கும், தொடர்புடைய பேராசிரியர்களுக்கும் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

6. மேலும், **இறுதிப் பருவம் (ஆறாம்) பயிலும் மாணாக்கர்கள் மட்டும்,** இதற்கு முன்பாக நடைபெற்ற ஏதேனும் செய்முறைத் தேர்வுகளில் தேர்ச்சிப் பெறாமல் இருப்பின், அவர்கள் எந்த பருவச் செய்முறைத் தேர்வுகளையும் செய்ய அனுமதிக்கப்படுவர். **அவ்வாறு அனுமதிக்கப்படும் மாணாக்கர்களுக்குத் தனித் தேர்வுக் கால அட்டவணையைத் தவிர்த்து, தற்போது நடைபெறும் செய்முறைத் பருவத்தேர்வுகளின் கால அட்டவணைக்கு உள்ளேயே ஏதாவது ஒரு நேரத்தில் (Session) அவர்களுக்கும் சேர்த்து நடத்திடத் தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டி முதல்வர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.**

7. செய்முறைத் தேர்வுகளின் **அக மற்றும் புற மதிப்பெண் பட்டியல்களை தேர்வு முடிந்தவுடன் அன்றைய தினமே பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிவைக்கக்** கேட்டுக்கொள்ளப்படுகிறது. செய்முறைத் தேர்வுகளின் மதிப்பெண்களை **பல்கலைக்கழக இணையதளத்தில் exams1.bdu.ac.in / New Portal-ல் பதிவேற்றம் செய்ய வேண்டி நாட்கள் குறித்து பின்னர் அறிவிக்கப்படும். அப்பொழுது, கல்லூரி செய்முறைத் தேர்வு மதிப்பெண் பட்டியல் நகலைக் கொண்டு பதிவேற்றம் செய்ய வேண்டும்** என்று கல்லூரி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இக்கடிதம் பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புகை அளிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**தேர்வு நெறியாளர்** (பொ)